## சில்லரை வர்த்தகத்தில்

# ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு

**சென்னை, டிச.25:**சென்னை எஸ்ஆர்எம் பல்கலைக்கழக மேலாண்மைத் துறை, 'தினகரன்' நாளிதழ், இந்திய சில்லரை வர்த்தக சங்கம், அமெரிக்காவின் 'ஸ்ட்ராஎட்' நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் 'சர்வதேச சில்லரை வர்த்தக வளர்ச்சி குறித்த மாநாடு' பல்கலைக்கழக வளாகத்தில் 3 நாள் நடந்தது.

பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சில்லரை வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகள், 250க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். நேற்று நிறைவு விழா நடந்தது.

சிறப்பு விருந்தினராக

### சர்வதேச மாநாட்டில் தகவல்

பங்கேற்ற டாடா குருப் முதன்மை மேலாளர் அஜித் ஜோஷி பேசுகையில், 'சில்லரை வர்த்தகம் மூலம் ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. படித்த மாணவர்களும் சில்லரை வணிகத்தில் ஈடுபட வேண்டும். இதன் மூலம் இந்தியாவின் பொருளாதாரம் உயரும்.

மாணவர்கள் எந்த துறையில் ஈடுபட்டாலும் லஞ்சம் வாங்காமல் இந்தியாவுக்கு பெருமை, புகழ் சேர்க்க வேண்டும்'' என்றார்.

'ஹாட் சிப்ஸ்' வாசுதேவன் பேசுகையில், "நான் கல்லூரி பேராசிரியராக பணியாற்றினேன். பின்னர், சில்லரை வர்த்தகத்தில் ஈடுபட்டேன். முதலில் 300 சதுர அடியில் சிறிய கடை வைத்தேன். இப்போது பல இடங்களில் ஓட்டல் நடத்துகிறேன். மாணவர்கள் சில்லரை வர்த்தகத்தில் ஈடுபட்டால் தங்கள் வாழ்க்கையையும், நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்த முடியும்'' என்றார்.

ஆட்டோமொபைல், எலக்ட்ரிக், எலக்ட்ரானிக் பொருள் விற்பனை, காய்கறி வியாபாரம், நுகர்வோர் விழிப்புணர்வு போன்றவை குறித்து பலர் பேசினர்.

பல்வேறு தொழில் நிறுவன மேலாளர்கள் பிரதிபா மொபத்ரா, பி.எஸ்.பிரகாஷ், சுந்தரராஜன், குமார் ராஜகோபாலன், நுகர்வோர் பாதுகாப்பு ஆலோசனை மைய செயலாளர் எஸ்.புஷ்பவனம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக மேலாண்மைத் துறை துணை முதல்வர் ராமச்சந்திரன், மாநாட்டுக் குழு தலைவர் எஸ்.செந்தில்குமார் ஆகியோர் முக்கிய அம்சங்களை தொகுத்து வழங்கினர். முன்னதாக, பல்கலைக்கழக மேலாண்மைத் துறை தலைவர் ஜெயஸ்ரீ வரவேற்றார். முடிவில், மாநாட்டுக்குழு துணைத்தலைவர் அருண்குமார் நன்றி கூறினார்.




சென்னை எஸ்.ஆர்.எம். பல்கலைகழகத்தில் கடந்த 3 நாளாக சில்லரை வர்த்தகம் தொடர்பாக சர்வதேச கருத்தரங்கம் நடந்தது. நிறைவு நாளான நேற்று டாடா நிறுவன முதன்மை மேலாளர் அஜித்ஜோஷி பேசினார். அருகில் ஹாட் சிப்ஸ் நிர்வாக இயக்குனர் வாசுதேவன், நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் புஷ்பவனம், தனியார் நிறுவன அகிகாரி குமார் ராஜகோபாலன். பல்கலைக்கமக இணை இயக்குனர் பிரகாஷ். டீன் ஜெயஸ்ரீசுரேஷ்.